நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2 நாகப்பட்டினம்

வழக்கு எண் : CC /134/2026

வழக்கு சாட்சி : – PW .2 Additional witness

| | | |
|---|---|---|
| பெயர் | : | மோகன்ராஜ் |
| தந்தை பெயர் | : | துரைராஜ் |
| கிராமம் | : | தஞ்சாவூர் |
| வயது | : | 38/ 2026 |

Solemnly affirmed in accordance with the provision of Oaths Act, 1969 (Act 44 of 1969), of the day of **08.06.2026**

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை )

**முதல் விசாரணை :**

நான் தற்சமயம் மதுவிலக்கு அமல் பிரிவு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். எங்கள் காவல் நிலையத்தில் பணிபுரிந்த காவல் உதவி ஆய்வாளர் முரளி அவர்களின் கையொப்பம் மற்றும் கையெழுத்துக்களை எனக்கு நன்கு தெரியும். கால விரயத்தை தவிர்க்கும் பொருட்டும் நீதியின் நலன் கருதியும் நான் கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன்.

நான் தற்சமயம் மதுவிலக்கு அமல் பிரிவு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.10.2025 ம் தேதி 16.30 மணிக்கு உதவி ஆய்வாளர் திரு. முரளி அவர்கள் தலைமையில் தலைமை காவலர் 643 பாலமுரளி மற்றும் என் முன்னிலையில் வாஞ்சூர் சோதனை சாவடி அருகே மதுவிலக்கு ரோந்து சென்று கண்காணித்த போது, சந்தேகத்திற்கு இடமாக ஒரு பாலிதீன் பையுடன் வந்த ஒரு நபர் எங்களை கண்டதும் தப்பி ஓட முயன்றவரை வளைத்து பிடித்து பின்னர் விசாரித்து தெரியவந்த எதிரி திவாகர் த /பெ. ராஜேந்திரன் கோட்டேரி சிக்கல், நாகப்பட்டினம் என கூறினார். அவர் கையில் வைத்திருந்த பாலித்தீன் பையை சோதனை செய்த

போது சுமார் 180ml பிடிக்கக்கூடிய பாண்டி சாராய பாட்டில்கள் 15 எண்ணிக்கை வைத்திருந்தவரை விசாரிக்க தான் வாஞ்சூர் சாராய கடையில் இருந்து வாங்கி வந்து அதிக லாபம் வைத்து விற்பதாக கூறினார். தன்னிடம் எவ்வித அரசு உரிமமோ, அனுமதியோ இல்லை என்று கூறியவரை காவல் உதவி ஆய்வாளர் குற்றக் காரணம் கூறி 17.00 மணியளவில் எதிரியை கைது செய்தார். மேலும் பொதுமக்கள் யாரும் சாட்சியம் அளிக்க முன்வராத காரணத்தினால், அன்றைய தினமே 17.30 மணிக்கு, உதவி ஆய்வாளர் திரு. முரளி அவர்கள் தலைமை காவலர் 643 பாலமுரளி மற்றும் தலைமை காவலர் 356 முனியப்பன் ஆகியோர்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் வாயிலாக 180ml பிடிக்கக்கூடிய பாண்டி சாராய பாட்டில்கள் 15 எண்ணிக்கை கைப்பற்றினார்.

பின்னர் அன்றைய தினமே 17.45 மணியளவில் காவல் உதவி ஆய்வாளர் திரு. முரளி அவர்கள் தலைமை காவலர் 643 பாலமுரளி மற்றும் தலைமை காவலர் 356 முனியப்பன் ஆகியோர்கள் முன்னிலையில் Sec 32 TNP Act 1937–ன் படி அழிப்பு மகஜர் வாயிலாக தடயத்தை கொட்டி அழித்தார்.

பின்னர் அன்றைய தினமே 18.00 மணிக்கு எதிரியை நிலையம் அழைத்து வந்து எதிரியை திரேக பரிசோதனை செய்து எதிரி மீது மதுவிலக்கு அமல் பிரிவு காவல் நிலைய குற்ற எண் 854/2025 U/s.4(1)(C) TNP Amentment Act 2024 ன் படி முதல் தகவல் அறிக்கையை தயார் செய்துள்ளார். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அதசாஆ–3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் தனது புலன் விசாரணையை முடித்து கொண்டு, எதிரி மீது ச/பி. 4(1)(C) TNP ACT –ன் படி குற்ற இறுதியறிக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

சம்பவ இடம் மக்கள் நடமாட்டம் நிறைந்த பகுதி என்றால் சரிதான். தனிநபர்கள் யாரும் இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கப்படவில்லை என்றால், தனிநபர் யாரும் சாட்சியாக இருக்க முன்வரவில்லை. இவ்வழக்கில் கைப்பற்றுதல் மகஜர் மற்றும் அழிப்பு மகஜர் ஆகிய ஆவணங்கள் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யவதற்கு முன்பு தயார் செய்யப்பட்டவை என்றால் சரிதான். ஆனால், மேற்படி ஆவணங்களில் குற்ற எண்

மற்றும் சட்டப்பிரிவுகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் ஆகியவை தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். புள்ளி விபர கணக்கிற்காக எதிரி மீது இந்த பொய்யான வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எதிரியிடம் இருந்து தடயப்பொருள் எதுவும் கைபற்றபடவில்லை என்றும், எதிரிக்கும் வழக்கிற்கும் தொடர்பு இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2 நாகப்பட்டினம்

வழக்கு எண் : CC /134/2026

வழக்கு சாட்சி : L.W.2 – PW .1

பெயர் : முனியப்பன்

தந்தை பெயர் : ஆறுமுகம்

கிராமம் : நாகப்பட்டினம்

வயது : 40 / 2026

Solemnly affirmed in accordance with the provision of Oaths Act, 1969 (Act 44 of 1969), of the day of **01.06.2026**

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை )

**முதல் விசாரணை :**

நான் தற்சமயம் மதுவிலக்கு அமல் பிரிவு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன்.கடந்த 18.10.2025 ம் தேதி 16.30 மணிக்கு உதவி ஆய்வாளர் திரு. முரளி அவர்கள் தலைமையில் தலைமை காவலர் 643 பாலமுரளி மற்றும் என் முன்னிலையில் வாஞ்சூர் சோதனை சாவடி அருகே மதுவிலக்கு ரோந்து சென்று கண்காணித்த போது, சந்தேகத்திற்கு இடமாக ஒரு பாலிதீன் பையுடன் வந்த ஒரு நபர் எங்களை கண்டதும் தப்பி ஓட முயன்றவரை வளைத்து பிடித்து பின்னர் விசாரித்து தெரியவந்த எதிரி திவாகர் த /பெ. ராஜேந்திரன் கோட்டேரி சிக்கல், நாகப்பட்டினம் என கூறினார். அவர் கையில் வைத்திருந்த பாலித்தீன் பையை சோதனை செய்த போது சுமார் 180ml பிடிக்கக்கூடிய பாண்டி சாராய பாட்டில்கள் 15 எண்ணிக்கை வைத்திருந்தவரை விசாரிக்க தான் வாஞ்சூர் சாராய கடையில் இருந்து வாங்கி வந்து அதிக லாபம் வைத்து விற்பதாக கூறினார். தன்னிடம் எவ்வித அரசு உரிமமோ, அனுமதியோ இல்லை என்று கூறியவரை காவல் உதவி ஆய்வாளர் குற்றக் காரணம் கூறி 17.00 மணியளவில் எதிரியை கைது செய்தார். மேலும் பொதுமக்கள் யாரும் முன்வராத காரணத்தினால், அன்றைய தினமே 17.30 மணிக்கு,

உதவி ஆய்வாளர் திரு. முரளி அவர்கள் தலைமை காவலர் 643 பாலமுரளி மற்றும் என் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் வாயிலாக 180ml பிடிக்கக்கூடிய பாண்டி சாராய பாட்டில்கள் 15 ஐ கைப்பற்றினார். அதில் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் அன்றைய தினமே 17.45 மணியளவில் காவல் உதவி ஆய்வாளர் திரு. முரளி அவர்கள் தலைமை காவலர் 643 பாலமுரளி மற்றும் என் முன்னிலையில் அழிப்பு மகஜர் வாயிலாக தடயத்தை கொட்டி அழித்தார். அதில் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் அழிப்பு மகஜரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **அந்த அழிப்பு மகசர் அ.த.சா.ஆ. 2ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் அன்றைய தினமே 18.00 மணிக்கு எதிரியை நிலையம் அழைத்து வந்து எதிரியை திரேக பரிசோதனை செய்து எதிரி மீது மதுவிலக்கு அமல் பிரிவு காவல் நிலைய குற்ற எண் 854/2025 U/s.4(1)(C) TNP Amentment Act 2024 ன் படிபடி வழக்கு பதிவு செய்ய உதவி ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

சம்பவ இடம் மக்கள் நடமாட்டம் நிறைந்த பகுதி என்றால் சரிதான். தனிநபர்கள் யாரும் இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கப்படவில்லை என்றால், தனிநபர் யாரும் சாட்சியாக இருக்க முன்வரவில்லை. இவ்வழக்கில் கைப்பற்றுதல் மகஜர் மற்றும் அழிப்பு மகஜர் ஆகிய ஆவணங்கள் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யவதற்கு முன்பு தயார் செய்யப்பட்டவை என்றால் சரிதான். ஆனால், மேற்படி ஆவணங்களில் குற்ற எண் மற்றும் சட்டப்பிரிவுகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் ஆகியவை தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். புள்ளி விபர கணக்கிற்காக எதிரி மீது இந்த பொய்யான வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எதிரியிடம் இருந்து தடயப்பொருள் எதுவும்

கைபற்றபடவில்லை என்றும், எதிரிக்கும் வழக்கிற்கும் தொடர்பு இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.